இருக்கவேண்டியது அவசியமாகிறது. ஆகவே கூரைகளை நீக்கி நல்ல ஓட்டுக் கட்டடமாகச் செய்வதற்கு விரைவில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இம்மாநிலத்தில் மொத்தம் 14 வேளாணமைப் பள்ளிகள் இருக்கின்றன. மூனறுக்கு நிரந்தரமான கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. 1969-70-கரு ஒரு லட்சம் ஒதுக்கி மேலும் இரண்டுக்கான கட்டடம் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இவ்வாண்டில் 2 பள்ளிக்கான கட்டடம் கட்டப்படும். இப்படி முறையாக அதுபற்றி கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

விவசாயக் கிடங்குகள்.

*296 **வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வேளாண்மை அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாவட்ட விவசாய அதிகாரிகளின் கண்காணிப்பில் இயங்கி வரும் விவசாயக் கிடங்குகள் (Agricultural Depots) இலாபகரமாக இயங்கி வருகின்றனவா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவசாயத்திற்கு வேண்டிய பொறுக்கு விதை, உரம் மற்றும் ஏனைய உபகரணங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பொருட்டேயன்றி இலாப நோக்கோடு அரசாங்கம் விவசாயக்கிடங்குகளை இயக்கிவருவதில்லை. ஆகவே இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, எத்தனை விவசாயக் கிடங்குகள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன என்பதையும், விவசாயக் கிடங்குகள் இல்லாத இடங்களில் கிடங்குகளை ஏற்படுத்த என்ன வாய்ப்பு வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட இருக்கிறது என்பதையும் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எத்தனை கிடங்குகள் இயங்கி வருகின்றன என்கிற விவரம் இல்லை. புதிய துணைக் கிடங்குகள் துவங்கப்பட வேண்டுமென்றால், மூலக் கிடங்குகளுக்கும் இப்போதுள்ள துணைக் கிடங்குகளுக்கும் உள்ள தொலை தூரம், மூலக் கிடங்கில் நடக்கும் வியாபாரம், துணைக் கிடங்கு ஏற்படுத்தியாக வேண்டிய அவசியம், பஞ்சாயத்து யூனியன் தீர்மானம் இவற்றின் அடிப்படையில்தான் துவங்க வேண்டும்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியன் தலைநகரில்தான் அரசினர் கட்டிடங்களில் கிடங்குகள் இருக்கின்றன. மற்றவை பெரும் பகுதி மாதம் 75, 100 ரூபாய் வாடகை என்று வாடகைக் கட்டிடங்களில் இருக்கின்றன. வருஷத்தில் 750 ரூபாய் வாடகை என்றால் நான்கு ஐந்து வருடத்தில் வாடகை மட்டும் எவ்வளவு ஆகிறது என்பதைப் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியைப் போடுங்கள்.

1970 மார்ச் 10]

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : ஆகவே, வாடகை இல்லாமல் சொந்தக் கட்டிடத்திலேயே இயங்க அங்கங்கே விவசாயக் கிடங்கு களுக்கான கட்டிடத்தைக்கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எல்லா வற்றுக்கும் நிரந்தரமான சொந்தக் கட்டடம் கட்ட இப்போது ஏற்பாடு இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : விவசாயிகள் விவசாய கிடங்கு களுக்குப் போகிறபோது பிற்பகல்—உணவு நேரம் என்று கிடங்குப் பணியாளர்கள் அதைப் பூட்டிக்கொண்டு போகிற நிலை இருக்கிறது. அப்படியின்றி ஷிப்ட் முறையில் தொடர்ந்து காலை முதல் மாலை வரை இயங்க விவசாயக் கிடங்குகளின் பணியாளர்களை அதிகப் படுத்த அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப் பட்ட புகார்கள் விவசாயிகள் மத்தியில் இருந்து வந்ததாகத் தெரிய வில்லை. எனினும் அரசாங்கம் இதுபற்றி பரிசீலிக்கும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அமைச்சர் அவர்கள் பதில் சொல் லும் போது லாப நோக்கத்தோடு மட்டும் இவை செயல்படவில்லை என்று சொன்னார்கள். நாம் இப்போதே 6 கோடிக்கு வரிகளை உயர்த்தியிருக்கிறோம். இவற்றினால் நஷ்டம் ஏற்படாத அளவுக் காவது பார்த்துக்கொள்ள முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அதிக நஷ்டம் வந்தால் கிடங்குகளை மூடத்தான் வேண்டும். நஷ்டம் வராது பார்க்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

Sheep breeding unit at Ootacamund

* 297 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Food and Commercial Taxes be pleased to state—

(a) whether the sheep breeding unit at Ootacamund has been closed; and

(b) if so, the reasons for this step?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : நீலகிரியில் வளர்க்கப்படுகிற ஆடுகளின் தரம் நம்முடைய விவசாயிகளைக் கவர்வதாக இருப்பத னால் மீண்டும் அதை அபிவிருத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நீலகிரியில் வளர்க்கப்படு கிற ஆடுகள் குறைந்து வருகிறதென்றுதான் அரசாங்கம் அவற்றை தீவிரப்படுத்த முயற்சி எடுத்துக்கொண்டு வருகிறது.